# பரம காணிக்கை

## அமரர்
## சபாபதி பரமேஸ்வரன்

இளைப்பாறிய கோட்டக்கல்விப் பணிப்பாளர்
கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு

அவர்களின் நினைவாக....

26.05.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பிறப்பு
06.03.1956

இறப்பு
2017.04.26

அமரர்
# கதிரவேலு சபாபதி பரமேஸ்வரன்

இது திதி

ஆண்டு ஏவிளம்பிவரும் ஆனதொரு சித்திரையில்
பூண்ட அமாவசைைப்பூண்திதியில் - நீண்டபுகழ்
சேரும் பரமேஸ்வரனிறைவன் தாளடைந்தான்
ஊரும் உறவும் அழ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# சபாபதி.பரமேஸ்வரன் அவர்களின் வாழ்வு

திருவும் கல்வியும் சேர்ந்துடனுறையும்
பெருமை பெற்ற பழம்பதி யாகும்
சிறுப்பிட்டி என்னும் சீர்சால் பதியில்
பொறுமை புலமை ஒன்றுடன் ஒன்று
சேர்ந்தே வளரும் செழுங்கலை ஆசான்
கதிரவேலு சபாபதி யுடனே
கருத்தொருமித்த சோதிப்பிள்ளையும்
செய்தவப் பயனாற் செகமதில் பெற்ற
பேறுகள் பல அதிற் பெருமை சேர்க்கும்
பிள்ளைகள் எழுவர் ஆலாய்படர்ந்து
அறுகெனத் தொடர்ந்தனர்.
அவர்களில்
ஐந்தாவதாக அவதரித்திட்ட
வான்புகழ் வளர்ந்த பரமேஸ்வரனே,
சின்னஞ் சிறிய வயதினிலே
சேரும் சிறுப்பிட்டியூர்
மன்னும் இந்து தமிழ்க் கலவன்
மலரும் பள்ளி தனிற்சென்று
கல்விக் கோபுரம் கட்டுதற்குக்
கால்கோள் அமைத்தான்
அத்திபாரம் பலமாக இட்டார் அதனால் நீர்வேலி
அத்தியார் இந்துக் கல்லூரி அதிலே இணைந்து
செயற்திறனுடைய மாணாக்கன்
செப்பருந் திறனுக்கு உரியவனாய்
நன்றாய்ப் படித்துப் பயிற்றப்பட்ட
நல்லாசிரியப் பேறு பெற்றோன்,
தர்மபுரம் எனும் தாயக மண்ணினிலே
தரமாய் உயர்ந்து வளருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை தன்னிலேயோர்
பண்பு நிறைந்த ஆசிரியப் பணியில் அமர்ந்தாய்
அப்பணி இருந்து அயரா முயற்சியால்
அதிபராகப் பதவியில் உயர்ந்தாய்.
கடமை உணர்வுடன் கச்சிதமாகப்
பணியினிலே பல பயன்களைத் தந்தாய்
அதனால்
கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவி
வீட்டை நோக்கி வந்துனை அணைத்தது.
பதவிப் படிகள் பற்பல தாண்டிப்
பாரில் உயர்ந்த பரமேஸ்வரன் நீ.

கரவையம்பதியின் புண்ணிய புராணிகர்
கல்லூரி அதிபர் பதவியை வகித்தோன்
நடராசா எனும் நல்லாசானும்
பவளம் எனும்பெண் பண்புடையாளும்
செய்தவப் பயனால் செகமதில் உதித்த
புண்ணியசீலி புகழ்பெறு பாரதி
தன்னை,
விண்ணவர் மண்ணவர் யாவரும் வாழ்த்த
வரன்முறை வழுவா வதுவையாற்றி
இல்லறம் தன்னை இனிதே ஓம்பி
நல்லியல்புடைய நங்கை சோதிகா
செந்திரு அனைய செம்மைகால் டூட்சிகாவுடன்
ஓதுகல்வியில் உயர்நிலை உடையோன்
சேதுராகவன் எனும் சேய்களைப் பெற்றோய்,

கோட்டக் கல்விப் பணிப்பாளர்
குணத்தால் உயர்ந்த மதிப்பாளர்
பாட்டால் பராவும் பண்பாளர்
கல்வித்துறையின் காப்பாளர்
என
கண்டோர், கேட்டோர், கலந்திருந்து
உண்டோர், உலகோர், உறவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் யாவருமே
உவந்து மகிழும்படி வாழ்ந்தீர்
அன்பொடு அறனும் உடைத்தாய் அமைந்த
இன்ப வாழ்விடை ''இடி'' என இடித்த
பொல்லா மரணம் புகுந்துன் வாழ்வில்
எல்லாம் வல்ல இறைவன் உன்னை
ஏற்றுத் தன்னுடன் வைத்திருப்பானே....

## "மரணம் கொடிதே"

பரமேஸ்வரன் காலமானார் எனத்
தொலைபேசியிலே சிவா சொன்னான்;
என்ன கொடுமை எனத் துணுக்குற்றேன்.
உடல்நலக் குறைவால் இறுதிச்சடங்கில்
கலந்துகொள்ளும் வாய்ப்பினை இழந்தேன்.
எண்ண அலைகள்,
கரவெட்டியில் கரைகளில் மோதி
விஸ்வமடுவெனும் ஆழ்கடல் தழுவும்
கந்தபுராணக் கடலைக்கடந்து
கரையேறியது எங்கள் குடும்பம்.
கச்சியப்பரே கோயில் வந்து
கந்தபுராணப் பயன் சொல்கிறாரென
மெச்சி ஊரார் புகழ்ந்த மரபினர்
பொன்னம்பல உபாத்தியாயரும்
சிற்றம்பல உபாத்தியாயரும்
பண்டிதர் க.சி. சண்முகம் முதலிய
புராணபடனப் புலமை மரபின்
என்முன்னவராக முகிழ்ந்த அறிஞன்
நடராசா அத்தான்
பவளம் அக்கா இருவரும் இணைந்து
பெற்ற பாரதியைக்
காதல் கூர்ந்து கைப்பிடித்திட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வரன் எனும் பண்புடையாளன்
கற்றவர், மற்றவர், பெற்றவர், யாவரும்
கண்டு மகிழ கல்வியுலகிலே ஆழக்காலைப்
பதித்தவன்.
பாரதியுடனே பரமேஸ்வரனும்
பவனிவருதல் கண்டு மகிழ்ந்தோம்
ஊரவர், உறவினர், உலகினர் புகழ
பேரும் புகழும் பெற்று வாழ்ந்தீர்கள்,
பரமேஸ்வரனின் பண்புகள் பற்றிப்
பலரும் கூறக் கேட்டு மகிழ்ந்தோம்
புத்திரர் கல்வியிற் புகழ்பெறல் கண்டு
சித்தம் மகிழ்ந்தோம்,
கொடிய நோயின் பிடியில் இருந்து
தப்பியதறிந்து மனமது உவந்தோம்
எதிர்பாராது உனது மரணம்
''வாழ்க்கை எத்தனை சுமையாய் இருப்பினும்
வாழ்தல் இனிதே,
மரணம் எத்தனை இலகுவாய் இருப்பினும்
மரணம் கொடிதே''

எனும் மகாவாக்கியத்தை மனத்திடைக் கொண்டேன்.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமைமிக்க கல்வியாளர்

அமரர் திரு.G.S பரமேஸ்வரன் அவர்கள் 26.04.2017ம் திகதி அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியுற்றேன். அமரர் திரு.G.S பரமேஸ்வரன் அவர்கள் சிறுபிட்டியில் பிறந்த போதும் தன்னுடைய நிரந்தர வசிப்பிடமாக விசுவமடுவை தெரிவுசெய்துகொண்டவர். 1978ம் ஆண்டு காலப்பகுதியின் ஆரம்பத்தில் தருமபுரம் மகா வித்தியாலயத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக இணைந்த அவர் ஒரு ஆளுமைமிக்க கல்வியாளர். 1990ம் ஆண்டு காலப்பகுதியில் எமது அயல் கிராமமான வள்ளுவர்புரம் பாடசாலையில் அதிபராகவும், பின்னர் 1993ம் ஆண்டு தொடக்கம் 1996ம் ஆண்டுவரை விசுவமடு மகாவித்தியாலயத்தின் அதிபராகவும் கடமையாற்றினார். அன்னார் விசுவமடு மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய காலப்பகுதியில் விசுவமடு பாடசாலையினுடைய கல்வி வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது எனக்குறிப்பிடலாம். அவர் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துடன், இப்பாடசாலையை கல்வி, விளையாட்டு, கலைத்துறைகளில் முன்னேற்றியவர். தனது கடின உழைப்பினாலும் கல்வி ஆழுமையினாலும் பாடசாலையையும், அதன் ஆசிரிய வளத்தையும் மேம்படுத்தியவர். இவ்வாறாக விசுவமடு மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய அமரர் விசுவமடு மகாவித்தியாலயத்தில் இருந்து பதவி உயர்வு பெற்று புதுக்குடியிருப்பு கோட்டக்கல்விப் பணிப்பாளராக இருந்தவர். தனது பாடசாலையின் முன்னேற்றத்திற்கு மட்டுமன்றி தனது பிள்ளைகளையும் கல்வியில் சிறப்புற உருவாக்கியவர்.

அமரர் திரு.G.S பரமேஸ்வரன் அவர்களின் திடீர் மறைவானது விசுவமடு கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு ஒரு பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், எமக்கும், விசுவமடு கிராமத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரது இழப்பு பாரரிய இழப்பாகும். அன்னாரின் பிரிவால் துன்புற்றிருக்கும் அவரின் அன்புத்துணைவியார் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி. பாரதி பரமேஸ்வரன் அவர்களுக்கும், அவருடைய பிள்ளைச்செல்வங்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**திரு.பெ.சிவகுமார் (மாவட்ட நீதிபதி , பருத்தித்துறை)**
**"தாயகம்",**
**புத்தடி,**
**விசுவமடு**
2017.05.22

## ஏன் அழைத்தான்?

**ஆசிரியர் பணி, அதிபர் பணி**
**கோட்ட மட்ட பணிப்பாளர் பணியென**
**நீண்ட பயணத்தில் உந்தன்**
**பாதச் சுவடுகளை மீட்டுப் பார்க்கிறேன்.**

**கல்வி வட்டத்தில் - நீ**
**தீட்டிய திட்டங்கள்**
**அடைவு மட்டத்தில் - உன்**
**ஆற்றலைக் காட்டின.**

ஏழை எளிய மாணவர்க் கெல்லாம்
இறங்கு துறை உந்தன் வாசல்படிதான்
கலங்கரை விளக்காய் நின்றே
கரையேற வழி காட்டினீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டங்கள் பெற்று பறப்பவரெனவும்
சட்டங்கள் கற்று சிறப்பவரெனவும் பல
மட்டங்களில் நின் பணியின்
எச்சங்கள் கண்டு வியக்கிறேன்

இல்லை என்று சொல்லா
வள்ளண்மை கொண்டீர்
தொல்லை என்று எண்ணா
நல்லெண்ணம் கொண்டீர்

நண்பர்கள் வட்டம்
நாற்றிசையும் பெற்றீர்
உறவினர்கள் வட்டம்
ஊரெங்கும் கண்டீர்

ஊர் மக்கள் உயர
உழைத்த நின் பணி
போது மென்று இறைவன்
அழைத்துக் கொண்டானோ.

கே. எஸ். வசந்தகுமார் (இ.நி.சே)
பிரதேச செயலர்
முசலி,
மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிலைத்து நிற்கும் அதிபர்

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்து இவ்வுலகு''

என்ற குறளுக்கு ஏற்ப வாழ்ந்தவர் G.S. பரமேஸ்வரன். விவசாயத்திற்குப் பேர்போன விசுவமடுவில் கல்வி செழித்து வளர வாழ்நாள் முழுவதும் தன்னலமற்ற சேவை புரிந்தார்.

எம்மிடையே உறவாடி உணர்வாகி இன்று நினைவாகி நிலைத்துவிட்ட பரமேஸ்வரனை முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பழகிய அனுபவம் எனக்கு உண்டு.

என்றுமே மலர்ந்த முகத்துடன் இயல்பாய் எளிமையாய் சகலருடனும் சகசமாய் சந்தோஷமாய் பழகும் பண்பாளன். அத்துடன், எதையும் வெளிப்படையாகப் பேசும் பாங்கும் எல்லாவற்றுக்கும் மேலாக அனைவரையும் ஒன்றிணைத்து நிர்வாகம் செய்யும் திறமை இவருக்குக் கைவந்த கலை. இதனைக் கண்டு நான் மிகவும் பூரித்திருக்கின்றேன்.

இவரது விசுவாசமிக்க சேவையில்தான் விசுவமடு அ.த.க. பாடசாலை, விசுவமடு மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் பௌதிக வளம், ஆசிரிய வளம் என்பவற்றை உரியவாறு ஒழுங்குபடுத்தி, அதனை நெறிப்படுத்தி திறம்பட சேவை செய்தவர். இவரது காலப்பகுதியில் நடைபெற்ற பாடசாலை விழாக்கள் இன்றும் சிறப்பு மிக்க விழாக்களாக பெருமையுடன் பேசப்படுகிறது.

வன்னி மண்ணை வாட்டி வதைத்த போர்ச் சூழலில் கூட தன் சேவையில் எந்தவித தளர்வும் காட்டாது மிகவும் சிறப்பாகச் சேவையாற்றியவர்.

ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு மேலாக சிறந்த மனிதனாய் உழைப்பில் உயர்ந்த இலட்சியவாதியாய் ஊரார் போற்றும் உத்தம புருஷனாய் எம்முடன் வாழ்ந்த மண்ணின் மைந்தன் G.S. பரமேஸ்வரனின் இழப்பு ஓர் பேரிழப்பாகும்.

இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சி இழப்பால் துவண்டு நிற்கும் துணைவி, பிள்ளைகளைத் தேற்ற வேண்டுமென வேண்டுகின்றேன்.

திருமதி ப. விநாயகமூர்த்தி
இளைப்பாறிய பதில் அதிபர்,
விசுவமடு மகா வித்தியாலயம்.

## விசுவமடுவின் முதல்வர்

ஒரு பாடசாலை என்ற நிறுவனத்தின் தலைவர் பள்ளிக்கு மட்டுமல்ல அப்பள்ளி சார்ந்த கிராமத்திற்கும் முதல்வர் ஆவார். அவர் தம் மேலாண்மை நிறுவனங்களுடன் அணுகும் தன்மைக்கேற்ப பாடசாலை மேம்பாட்டில் விருத்தியைக் காணும். இதனை முறையாக கையாண்டவர் அமரர் பரமேஸ்வரன்.

யான் 1993ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முல்லை மாவட்ட கல்விப் பணிப்பாளராக கடமையேற்ற அந்நாள் காலையில் இளமைத் தோற்றத்துடன் உள்ளீர்க்கும் சிரிப்புடன் ''நான் விசுவமடு மகா வித்தியாலய அதிபர்'' என்று அறிமுகம் செய்து என்னை வரவேற்ற பரம், அடுத்த கட்டமே இன்று எங்கள் பாடசாலையில் உங்களை வரவேற்க எம் பாடசாலையும் அயற் பாடசாலைகளும் சேர்ந்து ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளோம். வர வேண்டும்'' என்றார். யான் நேரம் என்றதும் ''பாடசாலை முடிவடைந்து பிற்பகல் 2.00 மணிக்கு பின்பு பாடசாலை கற்றல் கற்பித்தலைக் குழப்பாது நடைபெற ஒழுங்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டுள்ளோம்'' என்றார்.

அனுமதி ஏதும் இல்லை. இ∴து அவரது தலைமைத்துவ துணிச்சல், வரவேற்பு சிறப்பான ஒழுங்குடன் நடைபெற்றது. என்னை உற்சாகப்படுத்தி முல்லை மாவட்டத்தில் சேவையாற்ற துணிச்சலைத் தூண்டியது. எந்த நிகழ்விலும் அதிபர் குழாமுடன் பங்குபற்றி ஒத்துழைப்பு தந்த திறமையான அதிபர் பரம்.

அவரது முதலாம்தர அதிபர் பதவி உயர்வு என்னால் துணிச்சலாக எடுக்கப்பட்ட முடிவு. பரம் அவர்கள் கம்பீரத் தோற்றம், முகமலர்வு கொண்ட நிர்வாக முகாமைத்துவ நுட்பங்கள் கொண்ட சிறந்த பெறுமதி மிக்க மனிதவளம் பின்னைய காலத்தில் அவரது ஆற்றலை திணைக்களமும் பயன்படுத்திக் கொண்டது.

அத்தகைய பெறுமதி வாய்ந்த மனிதவளம் எமது பாதிப்புற்ற சமுதாய வளர்ச்சிக்கு உதவும் என எதிர்பார்த்திருந்தோம். காலன் எம்மிடம் இருந்து பிரித்து தம்பதம் சேர்த்துக் கொண்டார். அவரது ஆத்மா சிவபதம் அடைந்துள்ளது.

''அன்பே சிவம்''

கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை
Phd, L.L.B
ஓய்வுநிலை மாகாண கல்விப் பணிப்பாளர்,
மத்திய கல்வி அமைச்சின் முதுநிலை
கல்வி ஆலோசகர், SLEAS, Class I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் தேவையுணர்ந்த சேவையாளன்
# அமரர் ஜீ. எஸ். பரமேஸ்வரன்

அமரத்துவம் அடைந்த ஜீ.எஸ். பரமேஸ்வரன் அவர்கள் கோட்டக்கல்வி அதிகாரியாக புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய முல்லைத்தீவு வலயம் முழுவதிலும் பணியாற்றியவர். மாவட்டத்தின் யுத்த காலம் முழுவதும் பணியாற்றியவர். சகல அதிபர்களதும் ஆசிரியர்களதும் முழுத் தரவுகளையும் பரமேஸ்வரனிடம் கேட்டால் போதுமானதாக இருந்தது. மிக நெருக்கடியான காலத்தில் தன்னலமற்ற சேவையாற்றியவர். இடம், பொருள், காலம் அறிந்து உதவுவதில் பரமேஸ்வரனுக்கு நிகர் பரமேஸ்வரன்தான். இடர்பட்ட பலருக்கு தன் கையாலேயே நிதி உதவி அளித்ததை பலமுறை கண்டேன்.

யுத்த அனர்த்த நேரத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் இறுதியில் வலைஞர்மடம் ஆலயத்தில் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை நாம் மேற்கொண்டபோது சில ஆசிரியர்களுக்கு நாம் கொடுத்த தொகை காணாதபோது சிறு தொகையை தன் சொந்த பணத்தில் கொடுத்ததை நான் நேரில் கண்டேன். தேவையும் காலமும் அறிந்து உதவிய ஒரு உத்தமனாக அமரரைக் கண்டேன்.

இவ்வாறே மக்கள் இடம்பெயர்ந்து செட்டிகுளம் முகாமை அடைந்த பின்னர் அவ்வலுவலகத்தில் முல்லைத்தீவு வலய நலன்களை கவனிக்கும் அலுவலராக அமரர் ஜீ.எஸ். பரமேஸ்வரன் செயற்பட்டார். இடம்பெயர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கு பாடசாலை வழங்குவதிலும் சம்பளம் வழங்குவதிலும் முகாமில் அடைபட்ட ஆசிரியர், மாணவர்களுக்கான செயற்பாட்டிலும் அமரர் அளித்த பங்களிப்பை யாராலும் எக்காலமும் செய்யமுடியாது.

தொகுத்து நிறைவாக சொல்வதானால் தன்னலம் கருதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம், காலம், நேரம், தனது ஓய்வு கருதாமல் உழைத்த உத்தமர். கைச்சுத்தம் உடையவர். இவரது கடின உழைப்பினால் வேலை செய்வதையே வாழ்க்கையாக அமைத்துக்கொண்டவர். அவரின் இழப்பு கல்வி உலகுக்கு ஏற்பட்ட மாபெரும் இழப்பு என்பதில் சந்தேகமே இல்லை. அவ்வாறே அவரது மனைவி, பிள்ளைகள் சகோதரர்களுக்கும் பெரும் இழப்பாகும். எனினும் ''நெருநல் உளனொருவன் இன்றில்லை உலகில்'' எனும் ஆன்றோர் வாக்கை மதிக்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ப. அரியரத்தினம்
முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்,
முல்லைத்தீவு வலயம்.

## வளையாத நிர்வாகி

அன்பான பரம ஈஸ்வரனே!

இன்று நீங்கள் விண்ணுலகில் வாழ்கின்றீர்கள். மண்ணுலகில் நீங்கள் ஆசிரியராய், அதிபராய், கோட்டக்கல்வி அதிகாரியாய் சேவை செய்த காலத்தில் உங்கள் வளையாத நிர்வாகம் பற்றி அறிவேன். தூரநோக்கை அறிவேன். திட்டமிடலை அறிவேன், அர்ப்பணிப்பை அறிவேன். இந்த விடயங்களில் உங்களிற்கு நிகர் யாருமில்லை.

மனைவியானாலும் சரி, பிள்ளையானாலும் சரி, உறவானாலும் சரி நீதி நீதிதான் என்று தராசுடன் பணிசெய்த உங்கள் சேவைக்கு நிறைவு கிடைத்துள்ளது. தேவிபுர மாணவரும் சாதனை, மன்னாகண்டல் மாணவரும் சாதனை, இருட்டுமடு மாணவரும் சாதனை என்ற ஒரு நிலைக்கு சாதனை மட்டங்கள் விரிவுபெற்றமைக்கு அத்திவாரம் உங்கள் செயற்பாடுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையான ஆசிரியர் ஓரமான கிராமங்களிற்கும் செல்ல வேண்டும், மாணவர்களிடம் ஏழை, வசதிகள் இல்லை, யாவரும் ஒருவர் தான் என்ற கோட்பாட்டுடன் உழைத்த தங்கள் உழைப்புக்கு முன் பல சவால்கள் தடை விதித்தாலும் அவற்றை உடைத்து வளங்களை சமப்படுத்திய பெருமை உங்கள் காலத்திலுண்டு எவரும் அதை மறுக்க முடியாது.

உடையார்கட்டு மகா வித்தியாலயம், பாரதி வித்தியாலயம், விசுவமடு மகா வித்தியாலயம் இந்த பாடசாலைகளின் அதீத வளர்ச்சிகளில் அமரர் பரமேஸ்வரனுக்கு பங்குண்டு.

ஆசிரியை பாரதியின் கண்ணீரும் பிள்ளைகளின் கண்ணீரும் ஒரே மகன் சேதுவின் கொள்ளி குடத்துடன் சென்ற காட்சியும் எல்லோர் மனத்தையும் உருக்கிவிட்டது. பிடிவாதமும் எவருக்கும் அடிபணியாத தன்மையும் இறுதிவரை கொண்ட அமரரின் இறுதி பயணம் அனைத்து உறவுகளையும் கனக்கவைத்துவிட்டது. எனது வாழ்வில் பல ஏற்றத்துக்கு காரண காரியமான உங்கள் முன் சிலவேளை நான் தவறுவிட்டேனே என்று எண்ணி அழுவதுண்டு.

அதற்காக அமரர் உயிருடன் இருக்கும் காலத்திலே அவர்தன் பணிவிடைகள் செய்வதன் மூலம் பிராயச்சித்தம் தேடிவிட்டேன் என்று அமைதி கொள்கின்றேன். இறுதி நாட்களில் நோய் ஆட்சி செய்யும் வேளையில் கருத்துக்கள் பரிமாறுவார். அப்போது சேர் உங்களுக்கு ஆபத்து இல்லை. மனைவி பாரதியின் கற்பு சாவித்திரியை வென்றது. இலகுவில் ஆபத்து வராது. அத்துடன் மகள்மார் இருவரும் நல்நிலைக்கு வருவார்கள். மகன் சேது உலகமே போற்றுமளவுக்கு புகழ் பெறுவான் என்று கூறினால் இவற்றை நான் பாக்கவோ போகின்றேன் என கண் கலங்கினார். மரணத்தை முன்னரே தெரிந்திருந்தாரோ என எண்ணத் தோன்றுகிறது. அமரர் பரமேஸ்வரனின் ஆத்மா மறைந்தாலும் அவர் புகழ் மறையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இறுதிக்கிரியையில் கோட்டக் கொடிகள், பாடசாலைக் கொடிகள் போர்க்கப்பட்டு விசுவமடு மகா வித்தியாலய வளாகத்தில் அமரரின் பூதவுடல் வைக்கப்பட்டு பாடசாலைக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க உருக்கமான அஞ்சலியினைத் தொடர்ந்து நான்கு பாடசாலைகளின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் பூதவுடல் தகனத்துக்கு மெல்ல மெல்ல சென்றது.

அந்த வீதிகளே அழுதன. இவற்றை இறுதி யாத்திரையில் கண்டோம். மனைவி பிள்ளைகள் வேதனை தீரவும் ஆன்மா முத்திக்கு செல்லவும் எங்கள் பாடசாலை சார்பாக வேண்டுகின்றோம்

இ. செல்வநாயகம்
அதிபர்
மு/ சிறிசுப்பிரமணிய வித்தியாலயம்
புதுக்குடியிருப்பு.

## விசுவமடு மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிப் பாதையில்

வளம்பல கொழிக்கும் விசுவமடுவினை வாழ்விடமாகக் கொண்ட அமரர் ஜீ. எஸ். பரமேஸ்வரன் அவர்கள் 1992 இலிருந்து 1995 வரையான மூன்று நிறைவான ஆண்டுகள் எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இக் காலப் பகுதி விசுவமடு மகா வித்தியாலயத்திற்கு பொற்காலமாக அமையப் பெற்றிருந்தது. பௌதீக வளங்களையும் ஆசிரிய வளங்களையும் ஒழுங்கமைத்து மாணவர்களது அடைவு மட்டத்தினை உயர்த்திய பெருமைக்குரியவராவர். ஆசிரிய ஆளணி பற்றாக்குறைக்கு ஈடாக தொண்டர் ஆசிரியர்களை உள்வாங்கி இணைப்பாட விதானச் செயற்பாட்டிற்கும் கல்வி வாஞ்சை விருத்திக்கும் மாணவர்கள் சாதனைகள் பல படைக்க உந்துசக்தியாக செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய காலப்பகுதியில் பாடசாலையின் தரம் உயர்த்தப்பட்டு மு/ விசுவமடு அ.த.க. பாடசாலை எனும் பெயரானது மு/ விசுவமடு மகா வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அத்துடன் க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் மைதானக் காணி பெற்றுக் கொள்ளலும் ஆசிரியர் விடுதிக்கான காணி அகலிப்பும் ஏற்படுத்தப்பட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக எமது பாடசாலையில் ''பரிசளிப்பு விழாவும் பாடசாலை ஆரம்ப தின விழாவும்'' பெருவிழாவாக அமரர் அவர்களால் முதன்முதலாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அமரரது புதல்வன் மாகாணம், தேசிய மட்டங்களில் சாதனை புரிந்து எமது பாடசாலைக்கும், வடமாகாணத்திற்கும் பெருமை தேடித் தரும் வகையில் நல்ல தந்தையாகவும் திகழ்ந்துள்ளார். இவ்வாறாக எமது பிரதேச கல்வி வளர்ச்சிக்காக மகத்தான பங்களிப்பினை நல்கியுள்ளார்.

வன்னி மண்ணில் நிலவிய அசாதாரண சூழலில் பல பாடசாலைகளின் அதிபராகவும் எமது கல்வி வலயத்தின் இரு கோட்டங்களின் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி அர்ப்பணிப்புடன் கூடிய சேவைதனை நல்கி எமது கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சிக்கு பணியாற்றிய அமரர் அவர்களை எந்நாளும் எமது பாடசாலை சமூகம் சார்பாக நினைவு கூர்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றேன்.

ம. ந. அன்ரன் குலதாஸ்
அதிபர்
மு/ விசுவமடு மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்த புஷ்டியான பரம்

ஆளுமையின் கவர்ச்சியால் கட்டுண்டு கனவுகளின் நிஜ நாயகனாக எம்மோடு வாழ்ந்து உலகை விட்டுப் பிரிந்த பரமேஸ்வரன் பற்றிய பதிவை ஆக்குவதில் ஒருவித சஞ்சலத்தை உண்டுபண்ணுகின்றது. தொழில்சார் ரீதியாக ஏற்பட்ட நட்பு எனும் சங்கிலி இறுதிவரைக்கும் இறுக்கமாகவே பிணைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண பாரம்பரியத்தினுள் பிறந்து வன்னி மைந்தனாக வளர்ந்து வாழ்வின் அர்த்தபுஷ்டியான பக்கங்களை அனுபவித்து நீங்கா இடம்பிடித்துள்ள ஒரு மனிதனாக எம்முன் வாழ்ந்திருந்தார்.

ஆசிரியத் தொழிலில் நுழைந்து ஆரம்ப காலங்களிலேயே அதிபராக பின் கோட்டக் கல்வி அதிகாரியாக உயர்ந்து கல்விப் புலத்தில் பணியாற்றி வந்தவர். நிர்வாக ஆளுமை மிக்க ஒருவனாகவே நான் அவரைக் காண்கிறேன். ஏனெனில், கல்வித் துறையில் நிறைந்த அனுபவம் பெற்ற ஒருவராகவே அவர் எல்லோராலும் இனங்காணப்பட்டார்.

உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய காலத்தில் அப் பள்ளியின் புகழ் எல்லோராலும் பாராட்டிப் பேசப்பட்டது. அப்போது இடம்பெயர்ந்து பல பிரதேசங்களில் இருந்தும் வந்த மக்கள் உடையார்கட்டு கிராமத்தில் புகலிடம் தேடினர். எனவே, பாடசாலையிலும் மாணவர்களின் எண்ணிக்கை 2500 ஐயும் தாண்டி இருந்தது. நெருக்கடியான சூழல், வளப் பற்றாக்குறை எல்லாவற்றையும் சமாளித்து அப் பள்ளியை இயக்கிய விதம் எல்லோர் மனதிலும் நிறைவோடு நினைவுகொள்வதனை நான் காண்கிறேன். மாவட்டத்தின் முதல்தர பாடசாலையாக மிளிர்ந்து நின்றதை அப்பகுதி மக்கள் மறக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகவே ஆளுமைத்திறன் கொண்டிருந்ததால், தான் ஏற்றுக்கொள்ளும் பணியை செவ்வனே செய்து முடிப்பார். அவருக்குரிய அடையாளமும் அதுதான். ஆள் பாதி ஆடை பாதி என்பது போல தனது நடை உடையிலும் கவனமாகவே இருப்பார். அதன்மூலம் மிடுக்கான ஒரு நிர்வாகியாகத் தன்னைக் காண்பித்துக் கொண்டார்.

எம்மைவிட்டுப் பிரிவதற்கு சில நாட்களுக்கு முன்னர் தொலைபேசியில் உரையாடும்போது வழமை போல் அல்லாது வேறு பல விடயங்களை என்னுடன் பேசியிருந்தார். இறுதிக் காலத்தில் மனைவி, பிள்ளைகளுடன் சுற்றுலா சென்று களிக்க வேண்டும் என்பதனை மிகவும் விரும்பியிருந்தார். ஆனால், நீண்ட காலம் இருப்பேனோ தெரியாது என்கிற முத்தாய்ப்புடன் தனது பேச்சினை நிறுத்தினார்.

இவர் தனது இளமைக் காலங்களில் பலவிதமான மோட்டார் சைக்கிள்களை மாற்றி மாற்றி ஓடுவதில் விருப்பமாகக் காணப்பட்டார். இவ்வாறே A - 55 மோட்டார் காரினை யாழ்ப்பாணத்தில் பிரபல திரைப்பட அரங்கின் உரிமையாளரிடமிருந்து கொள்வனவு செய்து வைத்திருந்தார். பெருமளவு நாட்களில் இந்தக் காரினை நானே ஓட்டியிருக்கின்றேன். இந்தக் கார் அதன் மூல உற்பத்தியின் வர்ணம் மாறாமலும், அதனுள்ளே காணப்படுகின்ற இருக்கைகள் தரம் மிக்க தோலினால் ஆக்கப்பட்டதையும் ஏனையோர் வியப்புடன் பார்ப்பார்கள். தனது நடை உடை பாவனையில் எவ்வாறு கவனம் செலுத்தினாரோ அவ்வாறே தான் வைத்திருக்கும் வாகனங்களையும் மிகுந்த பராமரிப்புடன் வைத்திருப்பார். இவ்வாறே தனது இளமைக் காலத்தினை மிக்க மகிழ்வுடனே அனுபவித்து வாழ்ந்தவர்.

வாழ்வின் இறுதிப் பக்கங்களில் சிறுநீரக நோயினால் மோசமாக பாதிப்படைந்தார். மாதத்திற்கு இரு தடவைகள் உடலில் இரத்தம் மாற்றும் சிகிச்சையை எதிர்கொண்டார். அன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே இயல்பாக கதைபேசியபடி எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். அவரின் ஆத்மா அமைதியடைய வேண்டிக் கொள்கின்றேன்.

த. குருகுலராசா
இளைப்பாறிய வலயக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

# அமரர் G.S. பரமேஸ்வரன் அவர்களின் நினைவுத் தடங்கள்

வாழ்ந்தவரின் வாழ்க்கைப் பாடங்கள் வாழுகின்ற மக்களுக்கு வழிகாட்டியாக, அனுபவங்களாக அமைந்து நெறிப்படுத்தி விடுகின்றன. சமுக வாழ்வில், சமய வாழ்வில் தமது வாழ்க்கை முறையினையே மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக்கிச் சென்ற சான்றோரை எமது நா உச்சரிப்பது போல G.S. பரமேஸ்வரன் என யாழ் சிறுப்பிட்டிக் கிராமம் மட்டுமன்றி முல்லை மண்ணும் உச்சரிக்கும் வகையில்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - வானுறையும்

தெய்வமாகி விட்ட அமரரின் அனுபவப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்காமல் இருக்கமுடியாது. ''மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு" என்ற வள்ளுவர் கூற்று இவரது வாழ்விற்குப் பொருத்தமானதாகும்.

உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் தனது சமுகத்திற்கு வழங்கும் சேவையைப் பொறுத்தே வரலாற்றில் தடம் பதிக்கின்றனர். G.S. பரமேஸ்வரன் அவர்கள் வாழ்ந்த காலப்பகுதியில் மிகுந்த அடக்கத்துடன் சமுகத்திற்கு வழங்கிய சேவைகள் அளப்பரியன. ஊர், உறவு, சமுகம் என்ற விடயங்களில் நேர்த்தியான பார்வை கொண்டதுடன் தூரநோக்கும் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல ஆசிரியர் ஒருவரே நல்ல அதிபராக விளங்கமுடியும். நல்ல அதிபர் ஒருவரே நல்ல அதிகாரியாக மிளிரமுடியும். அதற்கமையவே அமரரின் வாழ்வியல்த் தடங்கள் அமைந்தன. குறிப்பாக விசுவமடு மகா வித்தியாலயம், பாரதி வித்தியாலயம், உடையார்கட்டு மகா வித்தியாலயம் போன்றவற்றில் நீண்ட காலமாக அதிபராக இருந்து அப் பாடசாலைகளை வளப்படுத்தினார். கோட்டக்கல்விப் பணிப்பாளராக இருந்து அவர் ஆற்றிய சேவையை எம்மண்ணின் மைந்தர்கள் என்றும் நினைவுகூருவர். அமரரை பெரும்பாலான கல்விமான்கள் ''விழா நாயகன்'' என்றே சிறப்பிப்பர். பாடசாலை, கோட்ட, வலய மட்ட நிகழ்வுகளில் முக்கிய பொறுப்புக்களை ஏற்று செவ்வனே நிறைவேற்றும் திறன் இவருக்கு உரியதே.

கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் பாடசாலைகளின் பௌதிக வளம், ஆசிரியர் வளம் என்பவற்றை சிறப்புற வழங்கியதோடு குறிப்பாக கஸ்ரப் பிரதேசப் பாடசாலைகளின் தேவைகளை நிறைவுசெய்து கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டியவர். மீள்குடியேற்றத்தின் பின்பு பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்ட போது உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த இவர் ஆசிரியர்களுக்கு வேலைகளைப் பகிர்வு செய்தும், அவற்றை அவ்வப்போது கண்காணித்தும் கல்வி விருத்தியை மேம்படுத்தியவர்களுள் இவருக்கு நிகர் இவரேதான்.

பிறர் பிள்ளை தலைதடவ தன்பிள்ளை தானே வளரும் என்பதற்கிணங்க அமரர் கல்விச் சமூகத்தை எவ்வளவிற்கு வளப்படுத்தினாரோ அவ்வளவிற்கு அவரது பிள்ளைகள் கல்வியில் உயர்ந்த நிலையில் மிளிர்கின்றனர்.

''தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்''

என்ற குறளுக்கு இலக்கணம் வகுத்தவர்கள் இவரது பிள்ளைகள். குறிப்பாக இவரது மகன் சேதுராகவன் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக சித்தி எய்தியமையும் கணித ஒலிம்பியாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியில் சர்வதேச ரீதியில் தெரிவு செய்யப்பட்டமையும் மகள் உயிரியல் பிரிவில் உயர்கல்வி கற்கின்றமையையும் குறிப்பிடலாம்.

பரமேஸ்வரன் என்ற சொல்லுக்கு இலக்கணமான அந்த மாமனிதரை இழந்து நொந்துபோயுள்ள அவர் பாசத் துணைவி, அன்புப் பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இறைவன் மனச்சாந்தி கொடுப்பதுடன் அந்த அற்புத பிறவியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி நிற்போமாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

சி. சுப்பிரமணியேஸ்வரன்
கோட்டக்கல்வி அலுவலர்,
புதுக்குடியிருப்பு

# அமரர் ஜி. எஸ். பரமேஸ்வரன்
# (ஓய்வுநிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்)
# அவர்களின் வாழ்வியல் முறைமை

அமரர் பரமேஸ்வரன் அவர்கள் விசுவமடு படித்த வாலிபர்கள் திட்டக் காணியில் அன்றிலிருந்து இன்றுவரை பார் புகழப் பலருக்கு உதவிபுரிந்து வாழ்ந்தவர். அமரர் அவர்களது வாழ்வு தனித்துவமும் கௌரவமும் முதன்மையும் கொண்டது. இவ்வாறான ஒரு மாமனிதரின் இழப்புப் பாரிய தாக்கம் கொண்டதாகும்.

உரியவேளையில் பாரதியைக் கைப்பிடித்து மூன்று செல்வங்களை ஈன்றெடுத்தவர். பிள்ளைகள் மூவருமே அதி விவேகம் கொண்டிருந்தார்கள். பண்பான, கீழ்ப்படிவுள்ள, சாதனை மிக்க பிள்ளைகளினால் அமரர் பரமேஸ்வரனுக்கும் மனைவி பாரதிக்கும் அதி உச்சக் கௌரவம் கிடைத்தது. குறிப்பாக மகன் தேசிய மட்டச் சாதனையாளராக விளங்கியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு மாவட்டத்திலே மல்லாவி மத்திய கல்லூரிக்கு அதிபர் வெற்றிடம் ஏற்பட்டபோது அமரர் பரமேஸ்வரன் மட்டுமே தெரிவாகியிருந்தார். அவ்வளவுக்கு நிர்வாகத் திறனும் ஆற்றலும் ஆளுமையும் கொண்ட முதல்நிலை முகாமையாளராக விளங்கியவர்.

அமரர் அவர்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எனும் அதிகாரியாக இருந்த பொழுதிலும் பணியாளர்களோடு நண்பனாக, ஆலோசனையாளராக, உதவுபவராக ஒரு அபிவிருத்திசார் அதிகாரியாக விளங்கியிருந்தார். அதிபராக இருந்த பொழுதிலும் சரி, அதிகாரியாக இருந்த பொழுதும் சரி கல்வித் திணைக்களம் மற்றும் கல்வி சார் உயர் அதிகாரிகளின் நன்மதிப்பும் அனுசரணையும் எப்பவும் கிடைத்தது. இந்தவகையில் திணைக்களத்தின் செல்லப் பிள்ளையாக விளங்கியவர். அமரர் அவர்களது புன்சிரிப்பால் அனைவரையும் கவர்ந்து கொள்ளும் ஆற்றல் காணப்பட்டது. இந்தவகையில் விஸ்வமடுவின் குறுநில மன்னனாக விளங்கியவர். அமரர் அவர்களிடம் செல்லும் அனைத்து அதிகாரிகளுக்கோ, பிறருக்கோ முறைப்படி விருந்தோம்பல் செய்யும் தமிழர் பாரம்பரியத்தை அப்படியே பின்பற்றிய மாமனிதர் பரமேஸ்வரன் அவர்கள்.

நான் அறிந்த வகையில் அவரது காலப்பகுதியில் கடமைபுரிந்த அனைத்துப் பணிப்பாளர்களும் கல்விசார் உயர் அதிகாரிகளும் அவரது வீட்டில் உணவு அருந்தத் தவறவில்லை. உபசரிப்பும் விருந்தோம்பலும் அவரது தலையாய உடமையாகக் கொண்டிருந்தவர்.

தனது வாழ்க்கையிலும் சரி தொழிலிலும் சரி இப்படித்தான் இருக்கவேண்டுமென்று வரைவிலக்கணம் வகுத்திருந்தவர். தனக்கே உருத்தான மனிதநேயம் நிறைந்த ஆளுமைப் பண்புகள் அவரை முதன்மைப்படுத்தியிருந்தது. இவ்வகைப்பட்ட பண்புகளைக் கொண்ட அமரர் பரமேஸ்வரனின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தமது செயல் மூலம் கல்வி உலகிற்கும் சாதாரண வாழ்வுக்கும் பல செய்திகளைச் சொல்லியுள்ளார். எனவே அமரர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் மனைவி, பிள்ளைகள், உறவுகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி

ச. நாகரத்தினம்
ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்.

## நெஞ்சில் நிறைந்த நண்பன்

### அமரர் ஜி.எஸ்.பரமேஸ்வரன் அவர்கள்

நல்லாசானாய்த் திகழ்ந்தார். நல்ல அதிபராகவும் சாதனைகள் நிகழ்த்தினார். நல்லதோர் அதிகாரியாகவும் தனது பணியைச் செவ்வனே செய்தார். அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும். கஷ்டத்திலுள்ளோருக்கு உதவுவதிலும் உயர் உள்ளம் படைத்தவர் என்பது நான் அவருடன் எனது நட்பைப் பேணுமுன்னரே. அவரிடம் உதவி பெற்றவர்களிடமிருந்து அறிந்துகொண்ட ஒரு விடயமாகும்.

நல்லதொரு நிர்வாகிக்கு இலக்கு வகுக்கத் தெரிய வேண்டும். அவ்விலக்கினை அடையும் வழிவகைகள் வகுக்கத் தெரிந்திருக்க வேண்டும். அந்த வகையில் அவர் அதிபராக இருந்த பொழுது மாணவர்களது கல்வியடைவுடன் இணை பாடவிதான செயற்பாடுகளையும் செவ்வனே வகுத்து மாணவர்களை முழு ஆளுமையுடையவர்களாக ஆக்குவதற்குத் தன்னாலான முழு உழைப்பையும் ஒன்று திரட்டி உச்ச விளைதிறன் கிடைக்கத்தக்கதாக செயலாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கை மிக்கவராக இருந்ததோடு அத்தகைய தன்னம்பிக்கைகளை தன்கீழ் பணியாற்றுபவர்களிடையே வளர்க்கத்தக்கதாக, பணிகளைப் பகிர்ந்தளித்து ஊக்குவிக்கும் தன்மையையும் தன்னகத்தே கொண்டிருந்தார். அதனாற்றான் போலும் அவரின் கீழ் பணியாற்றிய ஆசிரியர்கள் இன்று சிறந்த அதிபர்களாகச் செயலாற்றுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஏனைய ஊழியர்கள் கூட சிறந்த நிர்வாகத் திறன் கொண்டவர்களாகத் திகழ அவரது வழிகாட்டல்கள் உதவின. வேறு விதமாகக் கூறுவதாயின் ஒரு நிறுவன வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கத்தக்கதாக சகல ஆளணியினரையும் ஆக்கும் வல்லமைகொண்டவராக அவர் திகழ்ந்தார்.

தனக்கு பெரிய அதிபர் பதவி அல்லது அதிகாரி பதவி தராமல், பின்தங்கிய ஒதுக்குப் புறமாக கவனிப்பாரற்றிருக்கும் ஒரு சிறிய பாடசாலைக்கு தன்னை அனுப்பி, ஆசிரிய வளத்தினையும் தந்தால் நிட்சயமாக தன்னால் தரம் ஐந்து புலமைப்பரிசில் தேர்வில் கணிசமான தொகையினரைச் சித்தியடைய வைக்கமுடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவராக இரந்தார். அத்தகைய நம்பிக்கை கொண்டவர்களை உருவாக்கினார். தனது மகனை கிராமப்புற பாடசாலையான மு/நெத்தலியாறு தமிழ் வித்தியாலயத்தில் சேர்த்து புலமைப்பரிசில் தேர்வில் தேசியமட்டதத்தில் சிறந்த பெறுபேறு பெறவைத்து அதுகண்டு மிக மகிழ்ச்சி கொண்டவராக பரமேஸ்வரன் திகழ்ந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக நாணயமிக்கவராகத் திகழ்ந்தார். நாணயமாகப் பணியாற்றினார். அந்த வகையில் அவரால் பயனடைந்தோர் அனைவரினதும் உள்ளங்களில் அவர் என்றென்றும் வாழ்வார். எல்லாம் வல்ல பரமேஸ்வரன் பாதாரவிந்தங்களில் அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

அன்பர்.
செ.செல்வராஜா
ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையை நேசித்த உன்னத மனிதர்

திரு.கதிரவேலு சபாபதி பரமேஸ்வரன் அவர்களை பல்வேறு பதவி நிலைகளில் நான் பார்த்திருக்கிறேன். எந்த நிலையில் இருந்தாலும் செய்வதை திறம்பட செய்யவும் தற்றுணியாக முடிவெடுக்கவும் தயங்காத அவரின் ஆளுமையை பல தடவை வியந்ததுண்டு

எந்த காரியத்தை யாரைக் கொண்டு செய்து முடிக்கலாம் என்பதை சரியாக இனங்கண்ட அதனை செவ்வனெ செய்து முடிக்கும் திறன் மிக்க ஆற்றல் மிகு முகாமையாளராக தான் அவரை பல்விடயங்களில் கண்டிருக்கின்றேன்.

சரியான உண்மையான விடயத்துக்காக சுற்றுநிருபங்களையும் தாண்டி செல்லக்கூடிய அவருடைய வல்லமை உண்மையில் ஆச்சரியத்துக்குரிய ஒன்றுதான்.

அவர் கோட்டக்கல்வி பணிப்பாளராக இருந்த காலத்தில் அவரது கோட்டங்கள் தொடர்பாக எனக்கு எவ்வித பிரச்சினைகளும் எற்பட்டதில்லை தனது கோட்டத்தை "தன்னுடையது" என்ற உணர்வோடு நடாத்திச் சென்றார். அதிபர்களை தன்வசப்படுத்தி தான் நினைத்ததை சாதித்தார்.

உண்மையில் தலைசிறந்த ஒரு நிர்வாகியை இன்று நாம் இழந்து நிற்கிறோம். தனது சேவை காலத்தின் இறுதி நாள்வரை கடமையை செவ்வனே செய்த அவரின் மனதிடத்தை விபரிக்க வார்த்தைகளேயில்லை.

அவரைப் போலவே அவரது மகனும் எமது வலயத்துக்கு பெருமை சேர்த்து கொண்டிருப்பவர்.தரம் 5 தொடக்கம் இன்று வரை அவரது சாதனைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி உ.முனிஸ்வரன்
இளைப்பாறிய வலயக்கல்விப்பணிப்பாளர்
முல்லைத்தீவு

## துளித்துளியாக.....

''பொய்யாய், கனவாய், பழங்கதையாய் மெல்ல மெல்ல பிரிந்துவிட்டார்கள்''

26.12.1985 அன்று ஆசிரியப் பணியில் எனது முதல் நியமனத்தின் போது மு/வள்ளுவர்புரம் தமிழ் வித்தியாலயத்தில் அமரர் அவர்களைக் கண்டேன். மு/அம்பலவன் பொக்கணை அ.த.க.பாடசாலையில் இருந்து இடமாற்றம் பெற்று அதே தினம் அவர்கள் வந்திருந்தார்கள்.

தூய வெள்ளை நிறத்தில் ஆடை, உயர்தரத்தினாலான காலணிகள், நெற்றியில் விபூதி கூடவே சந்தணப் பொட்டு. புன்னகை முத்தாக முகம் இவரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

கிளிநொச்சியில் தருமபுரம் மகாவித்தியாலயம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை மட்டக்களப்பு பெரிய புல்லுமலை வித்தியாலயம், மு/அம்பலவன் பொக்கணை அ.த.க.பாடசாலை மு/வள்ளுவர்புரம் அ.த.க.பாடசாலை அதே பாடசாலையில் அதிபர் நியமனம் மு/விசுவமடு மகாவித்தியாலயம், மு/மல்லாவி மத்திய கல்லூரி, மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம் கோட்டக்கல்வி அதிகாரி கரைதுறைப்பற்று புதுக்குடியிருப்பு இவ்வாறே அமரரின் பணித்தடங்கள் அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பணிக்காக சென்ற போது 10 ஆம் வகுப்புக்கள் வரை மு/வள்ளுவர்புரம் அ.த.க.பாடசாலையில் இருந்தது. திரு.பரமேஸ்வரன் அதிபராகி சில நாட்களில் மு/பாரதி வித்தியாலயம் ஆனது. படிப்படியாக வளர்ச்சி கண்டது 1991 இல் மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் முழுமையான உபகரணத் தொகுதி கொண்ட விஞ்ஞான கூடம் ஒதுக்கப்பட்டிருந்தது. மாவட்டத்தில் ABC பாடசாலைகள் 04 இருந்தபோதும் O/L வரை உள்ள பாரதிவித்தியாலயத்திற்கு ஆய்வு கூடத்தைப் பெற்றுக்கொண்டார்கள். முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்விச் சமூகம் அன்றே அவரைத் திரும்பிப் பார்த்தது. கதிரவேலு சபாபதி பரமேஸ்வரன் எனும் திருநாமத்தின் சுருக்கமாக GSP ஆனார்கள். பாரதி மகாவித்தியாலயத்தின் படிமுறை வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட பெருமகன் என நான் எனது அனுபவத்தைப் பதிவு செய்கின்றேன்.

1990 இல் மட்டக்களப்பைச் சேர்ந்த திரு S.S.மனோகரன் அவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்விப் பணிப்பாளராக ஒன்பது மாதங்கள் பணியாற்றினார். அந்தப் பெருமகன் அமரர் GSP அவர்களுக்கு எழுதிய சில வரிகள் மட்டும் கொண்ட கடிதத்தை வாசிக்கும் வாய்ப்புக்கிடைத்தது ''தங்களது பல் பரிமானம் கொண்ட ஆளுமை மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்'' என எழுதி இருந்தார்கள். கால ஓட்டத்தில் அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டார்கள்.

1995 இல் அப்போது திரு.சுப்பிரமணியம் அவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்விப்பணிப்பாளராக பணியாற்றினார்கள். கல்வி அமைச்சு அமுல்படுத்த முன்பே பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறைமையை பரீட்சார்த்தமாக முன்வைத்தார்கள் இதனால் பல சவால்கட்கு முகம் கொடுத்தார்கள். GSP அவர்கள் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் பரிசளிப்பு விழாவை நடாத்தினார்கள். பிரதம விருந்தினராக திரு.சுப்பிரமணியம் அவர்கள் கலந்து கொண்டார்கள். பிரதம விருந்தினர் உரை ஆற்று முன்பு அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.G.S.பரமேஸ்வரன் அவர்களை மேடைக்கு அழைத்தார்கள் கல்வித்திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு கல்விப் பணிப்பாளரால் ஒப்பம் இடப்பட்ட அதிபருக்கான ''பாராட்டு விதப்புரை'' (Commendation) பத்திரத்தை தானே வாசித்து வழங்கி வைத்தார்கள். கரகோசமும் ஆனந்த ஆர்ப்பரிப்பும் விண்ணைத் தொட்டது விழாவில் கலந்து கொண்டதால் அந்த காட்சிகளைக் காணும் பாக்கியம் எனக்கும் கிடைத்தது.

இவர் எல்லோரையும் அண்ணை என்றே அழைப்பார். தன்னை விட வயதில் இளமையானவர் என கருத்தில் எடுக்கமாட்டார். அமரரின் விருந்தோம்பல் பண்பு மிகவும் கச்சிதமானது. இவரின் பிறந்த இடமான சிறுப்பிட்டி புகுந்த இடமான கரவெட்டி வதிவிடமான விசுவமடு இல்லங்களுக்கு சென்று வந்த நாட்கள் பசுமையாக உள்ளன. அமரரின் தந்தை, தாய், மூத்த சகோதரி, மைத்துணர் திரு.சதாசிவம் (கொப்பா அண்ணா) ஆகியோருடன் பழகிய நாட்கள் மனப் பதிவுகளாக உள்ளன. கரவெட்டியைப் பூர்வீகமாக கொண்டதால் திரு செவ்வேள் குடும்பத்தினர் எமது அயலவர்கள் என்ற நட்புறவும் இருந்துகொண்டே உள்ளது

பாலன் பஞ்சம் பத்து வருடம் தான் என்பார்கள்

அன்று பிறந்து இன்று இறப்பதற்குள்
ஆயதன்று மானிட வாழ்வு காண்
அப்பன் மகனாகி, மகனே அப்பனாகி
உயிர் ஓய்தலன்றி உளர்வதுதான்
மானிட வாழ்வு

அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

அ.அமிர்தலிங்கம்.
கோட்டக்கல்வி அதிகாரி,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மக்கள் நேசத்தால் மாண்புற்ற மானுடநேயன்"

பிறக்கும் போது நீமட்டும் அழு
இறக்கும் போது உறவே உனக்காக அழும்படி வாழ"

எனும் மெய் மொழிக் கிணங்க வாழ்ந்து சென்றவர்தான் அமரர் பரமேஸ்வரன் அவர்கள்.

எந்நேரமும் சிரித்த முகம் முகத்தில் சந்தனப் பொட்டு, மடிப்பு கலையாத உடுப்பு, கனிவான சிரிப்புடன் கலந்த பேச்சு, அடிக்கடி வெற்றிலை போடும் பழக்கம், இரக்கக் குணம், பிறருக்கு உதவி செய்யும் தன்மை சிறந்த ஆளுமை மிக்க நிர்வாகி நீங்கள்.

உங்கள் எண்ணங்கள் செயல்களில் சுயநலமின்மை. உங்கள் குடும்பத்திலே அளவு கடந்த பாசம் மற்றவர்களை புண்படுத்தாத நெஞ்சம், பழகுவதற்கு இனிமையாயும் அமைந்தவர் நீங்கள்

தூய உள்ளம் உங்கள் செயலிலே நேர்மை இவையெல்லாம் இவருக்கு பலம் சேத்த பண்புகளில் சிலவாகும். ''எவன் ஒருவன் இறைவனால் நேசிக்கப்படுகிறானோ அவன் விரைவில் இறந்து விடுவான்''

உங்களது இறப்பு உங்களது குடும்பத்துக்கு மட்டுமல்லாது உங்களோடு உறவாடிய அனைவருக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

என்றும் உங்கள் ஆத்மா அதிசய விநாயகர் பெருமானின் பாதார விந்தங்களில் இன்புற்றிருக்க இறைஞ்சிறேன்.

மருந்துவர் சிவசுப்பிரமணியம்
வாணி வைத்திய நிலையம்,
விஸ்வமடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# G.S.P என்ற அகல்விளக்கு

வன்னிப் பெருநிலப் பரப்பின் வசந்தோற்சவமாக, வளங்கொழிக்கும் மருதநிலமாய் வாழை, கமுகு வாசலில் வரிசை காட்டி வரவேற்கும் விசுவமடு.

கண்ணைக் குளிர்விக்கும் பசுமை பரவசமளிக்கும் ஊரில் சோகம் சுமந்த வலியின் சுவடுகள் அங்காங்கே காரணம் G.S.P இன் மறைவு.

இக்கிராமத்தின் குடியேற்ற வாசிகளின் உறவாக வந்து ஊரின் உறவாகிப் போன G.S.P யை அறியாதவர் இல்லை. விசுவமடு கிழக்கில் குடியேறி விசுவமடு பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய காலம் அப்பாடசாலையின் பொற்காலம். அங்கு கற்ற எந்தப் பிள்ளையையும் அவர் தந்தையின் பெயரைச் சொல்லி அழைக்கும் முறை அவர் அந்த ஊரை எந்தளவுக்குக் கற்று வைத்திருந்தார். என்பதற்குச் சான்றாகும்.

''ஓர் ஊர் மாற்றம் பெறவேண்டுமா?
அங்குள்ள பாடசாலைக்குள் மாற்றத்தைக் கொண்டுவா''

என்ற கருத்தை நடைமுறைப்படுத்திய செயல்வீரன் பாடசாலைத் தேவைக்காக எவரையும் அணுகும் முறை கல்வியில் நாட்டம் காட்டும் பிள்ளை யாராக இருப்பினும் உற்சாகமளித்துத் தூண்டும் பரந்த மனம் G.S.P விட்டுச் சென்ற பதிவுகள் இதற்குச் சான்று பகர்வது போலவே அந்த இறுதிநாள் அமைந்தது.

''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்த G.S.P இக்கிராமத்தின் சொத்து. ஆனாலும் எம்மால் சேமித்து வைக்க முடியவில்லை. காலத்திருடன் சூறையாடி விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G.S.P இக்கிராமத்தின் விடிவிளக்கு ஆனாலும் அணையாது காக்க முடியவில்லை. காலப்புயலால் கரைந்து விட்டது. G.S.P இக்கிராமத்தின் ஆலமரம் பாறித்தான் போனது ஆனாலும் மாணவர் பரம்பரையையும் பிள்ளைகளையும் விழுதுகளாய் ஊன்றிவிட்டுத்தான் பாறிப்போனது. விழுதுகளின் பதிவுகள் நாளை பேர் சொல்லும் இக் கிராமத்தின் வாரிசுகளாக. எம்மில் ஒருவனை இழந்துவிட்டோம். எமக்குள் அவன் இருக்கின்றான்.

கிராம அபிவிருத்தி சங்கம்
விசுவமடு கிழக்கு

## நினைவுகளில் சில நிமிடம்

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியில் பிறந்து வளர்ந்து விசுவமடு கிழக்கு விசுவமடுவில் கல்விப்பணியோடு நிண்ட காலம் வாழ்ந்து எங்கள் நெஞ்சமதில் நிறைந்த அமரர் சபாபதி பரமேஸ்வரன் அவர்களின் நினைவுப் பதிவுகளோடு சங்கமித்து அதனை பகிர்ந்து கொள்கின்றோம்.

கிளிநொச்சி முல்லைத்தீவு கல்வி வலயங்களில் ஆசிரியராக ஆரம்பத்தில் சேவையாற்றி பின் அதிபர் நியமனம் பெற்று தன்னுடைய சேவையை திறமையாகச் செய்து இளவயதிலேயே கோட்டக்கல்விப் பணிப்பாளர் பதவியைப் பெற்ற பெருமை அவருக்கே சாரும்.

கடமையில் கன்னியமாகவும் நேர்மையாகவும் பணியாற்றி சகலரையும் தன்வசம் ஈர்க்கச் செய்யும் ஆளுமை இவரது தனி உச்சமான செயற்பாடாகும். தில்லைக் கூத்தனின் திருநாமத்துடன் (பரமேஸ்வரன்) பார்வதி போன்ற பாரதியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைபிடித்து முத்தான மூன்று பிள்ளைகளைப் பெற்று வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்ந்து வந்தார்.

போராட்ட காலத்தில் இவரது சேவை மகத்தான ஒரு சரித்திரத்தை மற்றவர்கள் அறிய வைத்தமையை யாராலும் மறக்க முடியாது. விமானத் தாக்குதல்கள் ஒருபுறம் இருக்க, குன்றும் குழியுமாக கிரவல் வீதியில் வெய்யில், மழை என்று பாராது பாடசாலைகளை பார்வையிடுவதற்கும் ஆசிரியர்களை வழிப்படுத்தவும் அரும்பணி செய்த காலம் அக்காலம்.

புதுக்குடியிருப்புக் கோட்டத்திற்குட்பட்ட பல பாடசாலைகள் இவரது வழிகாட்டல்களில் நிறைவான ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சி கண்டுள்ளது. குறிப்பாக நெத்தலியாற்றுக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட மு/நெத்தலியாறு தமிழ்வித்தியாலயம் மற்றும் மு/விசுவமடு மகாவித்தியாலயம், மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம், மு/பாரதி வித்தியாலயம் என பல பாடசாலைகள் வளர்ச்சியடைவதற்கு அயராது உழைத்த உத்தமன்.

கடமை நேரத்தில் தன் பதவிக்குரிய பக்குவத்தோடு கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டித்தும் பாராட்ட வேண்டிய விடயங்களைப் பாராட்டியும் எம்மை சோர்வடைய விடாது தட்டிக் கொடுத்து வளர்த்த ஆசான் இவர். இவரின் வழிகாட்டல்கள் மூலம் நாம் இன்று உயர்வான நிறைவான சேவையை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக பல தொண்டர் ஆசிரியர்களை யுத்தகாலத்தில் நியமித்து ஆசிரியர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்தி இன்று அவர்கள் நிரந்தர சேவை யாற்றுவதற்கும் அடித்தளம் இட்டவர் இவரே என்பதை நன்றியுணர்வுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

சிரிப்பின் சிகரமாக நடையில் எம்.ஜீ.ஆர் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவனிவரும் எங்கள் குரு இன்று எம்மோடு இல்லை. அவரின் இழப்பு எமது மண்ணில் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவர் ஓய்வுபெற்றமை அவர் சேவையில் என்று நாம் மகிழ்ந்திருந்தோம். இன்னும் பல நுட்பங்களை அவரிடம் கற்று எம்மை வளர்த்துக் கொள்வோம் என்று ஆர்வத்துடனும் ஆசையுடனும் இருந்தோம். ஆனால் கொடிய காலன் அவன் அவர்தம் உயிரைப் பறித்து நிரந்தர ஓய்வைக் கொடுத்து விட்டான். தாங்க முடியாது தவிக்கின்றோம்.

நல்லவர்களையும் வல்லவர்களையும் ஆண்டவன் நீண்ட காலம் வையதுள் வாழவிடுவதில்லை, அவர்களை தன்னகத்தே எடுத்துக் கொள்கின்றான் என்ற வகை அறிந்து தேற்றுகின்றோம். எம் நெஞ்சமதை அவரை இழந்து தவிக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், மற்றும் உறவினருடன் நாமும் துயர்பகிர்ந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அவர்தம் நினைவுகளுடன்
நா.அக்கினேஸ்வரன்
பெ.பாலகிருஷ்ணன்
து.யோகராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்தன் குரு பரமேஸ்வரனுக்கு

வார்த்தைகள் என்னிடம் இல்லாத போதும்
வரிகள் எழுதிட துடிக்கின்றன விரல்கள்

சீடனாய் ஓர் கவி சிறிதாய் புனையென்று

பள்ளிப் பருவமதில்
பார்த்துப் பார்த்து வழிநடத்தி
பக்கத்தில் இருந்து அடியும் போட்டு
பாடம் சொல்லித் தந்த
பெற்றோருக்கு நிகரானவரே

உம்மைப் பற்றி சொல்வதென்றால்
உள்ளம் கொள்ளை கொள்கிறது ஐயா
ஊரும் உன்னை பாராட்டுகின்றது ஐயா - எனினும்
உயிரோடு உலவிய உம் நினைவு - தினமும்
உலகோடு உலவுகின்றது

வாலிப பருவமது
அரும்பு மீசை துளிர்விடவே - மெதுவாய்
நான் கல்வியை விட்டுவேலை தேடவென புறப்பட்ட போது
கற்ற பள்ளியிலேயே வேலை தந்து
இருபது வயது தாண்டும்இளைய வயது - அதனில்
இருந்து வேலை பார்த்தேன்....

இணையாய் உவகை தந்துஇருந்தீர் ஐயா குருவாய் எனக்கு
வேலை முடித்து வீடு சென்றால்தேடி வருவீர் பங்கயம் என்று
பேடி என் பெட்டை வந்து பொய்யை சொன்னால்
"அப்பா வாழைத் தோட்டத்தில் நிற்கிறார் அழைத்து வா என்பீர்"
வேறு வழிதான் இன்றி வெளியே வருவேன் நானும்
வாலிப வயதில் பொய்யா சொல்கிறாய்
பின்னே ஏறு என்றுஏற்றிப் போவீர் உம் வீடு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டக் கல்விப் பணிப்பாளராய் பதவி உயர்வு பெற்ற போது
என்னையும் அழைத்துச் சென்றீர் - உம் பின்னே
வாடா என்னோடு என்று
ஈராறு ஆண்டு உமக்காகவும்
உம் பணிக்காகவும் சேவை செய்தேன்....

உதாசீனம் செய்யாது இணைத்தீர் உம்மோடு
வலயக் கல்வி பணிமனைக்கு வேலை மாற்றி செல்கையிலே
என்னை மறந்தா போகிறாய் என்று
மாலை வேளை தேடி வருவீர் என் வீடு....

படிப்படியாய் நீரும் உயரஉம்மைப் போல நானும் வளர
வழிகாட்டிய உத்தமரே - நீர்
உலகை விட்டுச் சென்றாலும் - பல
உறவுகளில் வாழும் உம் நினைவு....

வர்ணிக்கத் தான் என்னிடம்
வார்த்தைகள் போதாது ஐயா - உமக்கு
கதை சொன்ன வாயால் - இன்று
உமக்காய் கவி புனைகின்றேன்
சரியோ பிழையோ என்று அறிவின்றி....

கவிகள் உம்மிடம் மனுக் கேட்கின்றன
அடுத்த ஜென்மத்தில்
எங்கள் வீட்டு ஓர் உறவாய்
நீர் உதிர்க்க வேண்டுமென்று....

**வை.பங்கஜன்**
**விசுவமடு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கைகள்

தோற்றம்
06-03-1956



மறைவு
26-04-2017

முன்னாள்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கரைதுறைப்பற்று.முல்லைத்தீவு

## திரு G.S பரமேஸ்வரன்

முல்லை வலயத்தின் எழுத்தாணி வித்தகனே — நீ
இல்லை எனும் போது ஏங்குது நெஞ்சம்
அள்ளி அணைக்கும் உன் கரங்கள் - எமை
தீண்டாது எனும் போது உறையுது இரத்தம்
நீ சாதித்த சாதனைகளின்
ஏணிகளில் நிற்கிறோம்.
நீ போதித்த போதனைகளை
நெஞ்சத்தில் நிறைக்கின்றோம்.
போய் வருக !.. எம் காவலனே !..
உன் ஆத்மா அடைக சாந்தி..! சாந்தி..! சாந்தி..!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்

துயரினில் பங்கு கொள்ளும்

கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள்
சக உத்தியோகத்தர்கள்
கரைதுறைப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் காணிக்கை

தோற்றம்
6.3.1956



மறைவு
26.4.2017

பரமேஸ்வரன் எனும் பெருந்தகையே
பார் போற்ற வாழ்ந்த உத்தமனே
அறிவுச்சுடரேற்றும் நல்லாசானாய்
ஆளுமை மிக்க அதிபராய்
செங்கோலோச்சும் கோட்டக்கல்வி பணிப்பாளராய்
பல பணிகள் ஆற்றிய செம்மலே
குடும்பத்தின் குல விளக்காய்
நட்பின் இலக்கணமாய்
காட்சிக்கு எளியவராய்
கருணையுடன் புரிந்த சேவைகள்
காலம் உள்ளளவும் கல்வெட்டாய் பதிந்திருக்கும்
மனிதருள் மாணிக்கமாய் குணக்குன்றாய் நிமிர்ந்த அண்ணலே
எங்கு தரிசிப்போம் இனி?
மீளத்திரும்பவியலாத ஊருக்கு விரைந்ததும் ஏனோ?
பசுவிழந்த கன்றாய் பரிதவித்து நிற்கின்றோம்
மும்மூர்த்திகளாயினும் காலம் என்ற வலை கடக்கலாகுமா?
ஈடு செய்யமுடியாப் பேரிழப்பு
பிரிவை எங்கனம் தாங்குவோம் ஐயா?

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவுத்துயருடன் பாடசாலை சமூகம்
மு/புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

மலர்வு
1956 . 03 . 06

உதிர்வு
2017 . 04 . 26



# அமரர்
# சபாபதி பரமேஸ்வரன்

இருக்கும் வரை இனிமையாக இருப்போருடன் பழகிவந்து
உருக்கும் நிலைக்கு உற்றோரை உருவாக்கி வைத்துநிற்க
இரக்கமில்லா இயமனவன் உம்மைப் பறித்தானோ..?
நிறைமனதோடு எல்லோருடனும் பழகுகின்ற உறவுகளின்
நெருக்கமான பிணைப்போடு நாமும் பழகியதினால் பரமனவன் அழைத்தானோ?
வருத்தங்கொண்டு நும்பிரிவால் வருந்துகின்றோம் உம்மைத் தேடுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**துயரைப் பகிர்ந்து கொள்ளும்**
**சிறுப்பிட்டி கிழக்கு,**
**அரசன்திடல் உறவுகள்**

**28.04.2017**

சனு பிறிண்டேர்ஸ் பருத்தித்துறை வீதி, புத்தூர். தொ.இ: 0775638607



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி....



மண்ணில்: 06 . 03 . 1956

விண்ணில்: 26 . 04 . 2017

மு/விசுவமடு மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும்,
ஓய்வு நிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளரும், எமது பாடசாலையின்
உப அதிபர் திருமதி பா.பரமேஸ்வரன் அவர்களின் பாசமிகு துணைவருமாகிய

## அமரர் ஜி.எஸ்.பரமேஸ்வரன்



எம்மை விட்டு நீர் பிரிந்து சென்றாலும்
எம்மனதை விட்டு நீர் விலகவில்லையே உம்
சிரிப்புக் கதை என்றும் எம் மனங்களில்
காண்கின்றோம் வையகம் உள்ள மட்டும்
உங்கள் நினைவு எம் நெஞ்சங்களை விட்டகலாது



அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலை அபிவிருத்திக் குழு
பழைய மாணவர் சங்கம்
மு/விசுவமடு மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்..



மண்ணில்:
06 . 03 .1956

விண்ணில்:
26.04.2017

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

அமரர்

# சபாபதி பரமேஸ்வரன்

(ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்)

படித்த வாலிபர் விவசாய நிலமாம் விசுவமடு தன்னில்
நிகரற்ற சேவையாளன் பரமேஸ்வரனே
ஏழைகளின் துயர் துடைத்தவரே
பண்ணையாளர் எனப் பெயர் பூண்ட பண்பாளனே
எம் பள்ளியின் அதிபராய் அளப்பெரும் பணிபுரிந்தீர்
உம்காலம் எமக்கது பொற்காலம்
கடமை கண்ணியத்தோடு நேரம்தன்னில் நேர்த்தியானவர்
முல்லைக் கோட்டங்களின் பணிப்பாளர் ஆனாய் நீயே
கல்விச் சேவையில் உம்பணியின் விளைவுகளாய்
பல விருதுகள் உள்ளூர உவக்கின்றன
அரிய உம் ஆத்மா ஆண்டவன் அடியில்
ஆறுதல் அடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயர் கொண்டிருக்கும் குடும்பத்தாருடன் நாமும்
பங்குகொண்டு ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
விசுவமடு மகா வித்தியாலயம்.

NSA Ads +94 773 849808 www.nsaart.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி...

மண்ணில் 1956 03 06



விண்ணில் 2017 04 26

## அமரர் G.S.பரமேஸ்வரன்

*(ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்)*

மாசில்லா ஆசிரியராய் நல்லதிபராய்
முல்லையின் இரு கோட்டங்களின் பணிப்பாளராய்
மாண்பான சேவை செய்து எம்மிதயத்தில் குடிகொண்ட
மாமனிதன் பரமேஸ்வரனே! எங்கே எமைவிட்டுச் செல்கிறாய்?

நெற்றியில் பொட்டுடன் நேரிய ஆடையணிந்து
புன்சிரிப்போடு பற்றுடன் பகலிரவாய் பள்ளியை வட்டமிட்ட
பரமேஸ்வரன் பாதியில் எமைத் தவிக்கவிட்டு
பாடையிலே போக படுத்திருப்பதோ?

எல்லா சிறப்போடும் ஏற்றங் காண்பாய் என்றிருக்க
ஏணிப் படியாக ஏற்றங்காணும் உன் செல்வங்களைத் தவிக்கவிட்டு
பாரதியை சந்திரமதிபோல் துடிதுடிக்கவிட்டு
பரமனடி சேர்ந்த பரமேஸ்வரா! உமைக் கூப்புகின்றோம்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

வலயக்கல்விப் பணிப்பாளர்,
பணியாளர்கள்,
வலயக்கல்விப் பணிமனை,
முல்லைத்தீவு.

வடிவமைப்புடன் பதிப்பு :- எவரெஸ்ட் பதிப்பகம் – புதுக்குடியிருப்பு. 077 9605119



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 06 . 03 . 1956

உதிர்வு 26 . 04 . 2017

எமது நண்பன் சேதுராகவன் அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர்.சபாபதி பரமேஸ்வரன்

(முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் - கரைதுறைப்பற்று)

கண்கள் பல உங்களைத்தேட

காணாமல் காலனுடன் சென்றதேனோ!

புன்னகை பூத்த பொன்முகம்

மறைந்ததேனோ!

கண்களெல்லாம் கடலாய் பொங்க

எம்மை கலங்கவிட்டு

எங்கு நீர் சென்றீர்?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

[illegible]ால் துயருறும்

ஏ.[illegible], [illegible]ராகுலன், த.சஞ்சுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி....

மண்ணில்: 06 . 03 . 1956



விண்ணில்: 26 . 04 . 2017

புதுக்குடியிருப்பு, மற்றும் கரைதுறைப்பற்று
ஓய்வு நிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்

## அமரர் ஜி.எஸ்.பரமேஸ்வரன்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும்

உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை

தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின்

ஆத்மா சாந்திக்காகவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்..

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்
மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு

06 . 03 . 1956

இறப்பு

26 . 04 . 2017

எமது சக மாணவி ப.துட்சிகா அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர். சபாபதி பரமேஸ்வரன்

(முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் – கரைதுறைப்பற்று)

சங்கத் தமிழை
மறந்தாலும்
தமிழர் வாழ்வை
சரித்திரம் மறந்தாலும்
சாவு வந்து நம்மை
சமரோ, சாந்தியோ
சகட்டுமேனிக்கு எது வந்தாலும்
எப்போதும் உங்கள் நினைவுகளை
என்றும் நாம் மறக்கிலோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
2017 கணித விஞ்ஞான பிரிவு மாணவர்கள்
விசுவமடு மகா வித்தியாலயம்

[illegible] 0776115301



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



பிறப்பு 1956 . 03 . 06

இறப்பு 2017 . 04 . 26

(ஓய்வு நிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர்)

## அமரர் G.S பரமேஸ்வரன்

(விசுவமடு கிழக்கு, விசுவமடு)

கூட்டம் தடம் புரளாத விட்டமில்லா பெருவட்டம்
அட்டதிக்கு திரண்டாலும் அடிபணியா இரும்பொறை
முட்டும் பகையனுக்கும் முழுமனிதன் பரமேஸ்வரனுக்கு
இட்டமுடன் இறைபதம்வேண்டி இன்நாளில் அஞ்சலிக்கிறோம்

கோட்டமாம் புதுக்குடியிருப்பின் கோதறப் பழத்தபணிப்பாளராய்
வாட்ட மின்றி வளர்த்தவரை வானுயரப் போற்றுகின்றோம்
மீட்டும் அவர்சிந்தனையில் ஆட்டங் கண்ட பாடசாலைகள்
ஈட்டின பலவெற்றிகளை இவையாவும் அவர் சாதனை

இடம் பெயர்ந்துமுகாமில்வாழ்ந்து முடமாகி மீண்டபோது
தடம் பதித்தபள்ளிகளை மீண்டெழவைத்த அதிகாரி
இடம் இடமாய் மீண்டும் திறந்து எச்சங்களை வாழவைக்க
புடமிட்ட பரமேஸ்வரனுக்கு புண்ணிய உலகம் அழைக்கிறது

சென்று வருக கல்விமானே சென்றகாலம் மறையாது
வென்று நின்றவரிகள் என்றும் வேகாமல்குடும்பத்துடன் ஒட்டும்
நன்று நன்றாய் பிள்ளைகள் நாளை உயர்வர் உலகில்
நின்று புகழ்பரப்ப நீங்கள் விண்ணில் நின்றுபாருங்கள்

புதுக்குடியிருப்பு கல்விக்கோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி..

மண்ணில்: 1956 - 03 - 06



விண்ணில்: 2017 - 04 - 26

எமது சக மாணவன் சேதுராகவனின் தந்தையும் வணிக பாட ஆசிரியையின் கணவரும் மு/விசுவமடு மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளருமாகிய

## அமரர் G.S பரமேஸ்வரன்

**இரு விழிகள் மூடியதால்**
**பல விழிகள் ஈரத்தால் நனைகின்றன**
**இனிய பொழுதில் நீர் கண்மூடியதால்**
**எம்மையெல்லாம் கலங்கவைத்துப் போனதேன்...?**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தரம் 11 மாணவர்கள்
மு/விசுவமடு மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்..





மண்ணில்: 06.03.1956

விண்ணில்: 26.04.2017

ஓய்வு நிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்

அமரர்

## ஜி.எஸ்.பரமேஸ்வரன்


ஆசிரியராய், அதிபராய் அளப்பரும் சேவையாற்றி
அவனியிலே உயர்ந்து நின்ற அண்ணலே – உங்கள்
அருஞ்சேவைப் பணியிலே அடுத்த மைல் கல்லாய்
கோட்டக்கல்விப் பணிப்பாளராய் முல்லைக் கல்விக்கு
குறைவின்றி பணிபுரிந்தீர்.
ஒருவருட ஓய்வுடனே நிரந்தரமாய் பிரிவீரென
ஒருவரும் நாம் நினைக்கவில்லை
முத்தாக மூன்று பிள்ளைகள் சொத்தாக உமக்கிருந்தும்
வித்தாகவே அவரை விட்டு விளைவு காணும் முன்னரே
விடைபெற்றுச் சென்றதேனோ! கல்வியிலே சாதனைகள் காட்டவென
பிள்ளைகள் கரம் கோர்த்து நிற்கையிலே – அவர்தம்
கரம் பறித்தழைத்தானோ கருணையற்ற யமன்
கரம் பிடித்த உம் மனைவி கதறியழும் சத்தம் – எம்
கண்களை நிறைக்கிறது உறவர் ஒன்று கூடி
ஒப்பாரி சொல்லியழ உறவரை விட்டு உறவுகளைத் தவிக்கவிட்டு
பரமனடி சேர்ந்தனையோ – எங்கள் பாசமிகு பரமேஸ்வரனே!

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்.
மு/ நெத்தலியாறு தமிழ் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சம்




❖ அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எங்கள் குடம்பதலைவரின் மறைவின் போத
ஆறுதல் அளித்து எமக்கு அருந்துணையாக
நின்றும் இறுதி நிகழ்வு சிறப்பாக நடைபெற
உதவிய உறவினர்கள், நண்பர்கள்
உத்தியோகத்தர்கள், அயலவர்கள் அனைவருக்கும்
நன்றி நவில்கின்றோம்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

50/1 விசுவமடு கிழக்கு,
விசுவமடு.
26.05.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்பூங்கா – நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org